# தேசிய விஞ்ஞான மன்றம்- 2010

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, தேசிய விஞ்ஞான மன்றம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

ரூபா 4,095,833 பெறுமதியான வெளியீடுகள் இருப்புக் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியில் நானாவித கடன்பட்டோர்களின் மீதி ரூபா 1,646,250 ஆக இருந்ததுடன் அறவிடப்படவேண்டியுள்ள முற்பணக் கணக்குகளின் மீதி ரூபா 98,195 ஆக இருந்தது. நானாவித கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 1,576,469 தொகை 1 ஆண்டிற்கு உட்பட்ட காலத்தைக் கொண்ட கடனாக இருந்ததுடன் 1 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட பழைய

கடன்பட்டோர் மீதி ரூபா 69,780 ஆக இருந்தது. மேலும் 1 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலங்கடந்த முற்பணங்களின் பெறுமதி ரூபா 65,995 ஆக இருந்ததுடன் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட பழைமைவாய்ந்த முற்பணங்களின் மீதி ரூபா 30,000 ஆக இருந்தது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

ஒவ்வொரு விடயத்திற்கும் முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் இல்லாமையின் காரணமாக கணக்குகளிலுள்ள பின்வரும் விடயங்களை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு/ மெய்மையாய்வு செய்வதற்கு அல்லது கணக்காய்வில் ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | வழங்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| காணிகள் | 282,701,586 | காணிகளின் உரிமை உறுதிகள் இல்லாமை |
| நிலையான சொத்துக்கள் (கட்டிடங்களைத் தவிர்த்து) | 85,502,354 | பெறுமதிகளைக் காட்டும் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமை. |
| இருப்பு | 5,213,690 | பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| கடன்கொடுத்தோர் | 6,673,953 | உரிய நபர்களினால் மீதிகளை உறுதிப்படுத்தல் |
| உபகரண மானியம் | 2,063,126 | பதிவுப் பொருள் இருப்பு பதிவேட்டின் சான்றுபடுத்திய பிரதி |

முதலீடு – நென்கோ கம்பனி 82,000,000 பங்குச் சான்றிதழ்

**1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபம் | |
| (i) 9.4 ஆம் பந்தி | தேசிய விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான உத்தியோகத்தர் ஒருவர் சாக் வலு நிலையத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரமின்றி 3 ஆண்டுகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்தார். |
| (ii) 9.10 ஆம் பந்தி | 22 ஊழியர்களை பணி ஒப்படைப்பு அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்காக திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 8.8 ஆம் பந்தி | நிதி அதிகாரம் ஒப்படைக்கப்படுகின்ற ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 மார்ச் 01 ஆந் திகதிய 09 ஆம் இலக்க தேசிய கொள்வனவு சுற்றுநிருபத்தின் 9 ஆம் பந்தியின் 2.14.1 ஆம் பிரிவு | விலை மனுக்கோரல் முறைமை ரூபா 2 மில்லியனுக்கு குறைவான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே பயன் |

படுத்தப்படவேண்டிய போதிலும் உலக விஞ்ஞான தின விழாவின் ரூபா 2,823,500 தொகையான செலவுகளுக்காக இம் முறைமையின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| (இ) | நிதிப் பிரமாணம் 371(2) | வழங்கப்படக்கூடிய கட்டுநிதி ரூபா 20,000 இற்கு மேற்படக்கூடாது என்ற போதிலும் நிரந்தரமாக வைத்துக் கொள்ளப்படுகின்ற ரூபா 50,000 தொகையான விசேட கட்டுநிதி ஒன்று வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | ஆராய்ச்சி மானிய உடன்படிக்கை | 2003 மற்றும் 2005 காலப்பகுதி தொடர்பாக பூர்த்திசெய்யப்பட்ட ஆராய்ச்சி மானியங்களின் 15 கோவைகளின் தெரிவுச் செவ்வையின் போது 08 மானியங்களுக்கான இறுதி ஆராய்ச்சி அறிக்கைகள் 90 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு மன்றத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 4,721,202 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான அதற்கு எதிரான பற்றாக்குறை ரூபா 2,485,631 ஆக இருந்தது. இதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 7,206,833 தொகையான அதிகரிப்பு ஒன்றினைச் சுட்டிக்காட்டியுள்ளது. ஐயக்கடன் மற்றும் கணக்காய்வுக் கட்டணங்கள் தொடர்பாக முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முறையே ரூபா 7,367,059 மற்றும் ரூபா 1,315,241 தொகையான அதிக

ஒதுக்கீடுகள் மீளாய்வாண்டில் வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டமை இதற்கு தாக்கமளித்த பிரதான காரணமாகியது

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

| விடயம் | தொகை<br>ரூபா | அவதானிப்பு |
| --- | --- | --- |
| விடயத்தின் தொடக்க ஆராய்ச்சி | - | உணவுப் பாதுகாப்பு, கால நிலை தாக்கங்கள், வலு ஆகிய 4 முக்கிய துறைகளை இனங்கண்டு இந் நிகழ்ச்சித் திட்டத்தினை 2009 ஆம் ஆண்டிலிருந்து அமுல்ப் படுத்துவதற்குத் திட்டமிடப் பட்டிருந்த போதிலும் 2010 திசெம்பர் 31 வரையும் இதற்காக நிதி வழங்க முடியாதிருந்தது. இது சில ஆண்டுகள் தேவைப்படும் ஓர் செயற்திட்டம் என தலைவர் தெரிவித்திருந்தார். |
| பூர்த்திசெய்யப்பட்ட ஆராய்ச்சி | 21,181,124 | பூர்த்திசெய்யப்பட்ட ஆராய்ச்சிகள் தொடர்பாக ஆராய்ச்சிப் பத்திரம் மற்றும் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ஆராய்ச்சி மானிய நிதியம் | 70,150,000 | ஆராய்ச்சி மானியத்திற்காகக் கிடைத்த பணத்தில் புதிய ஆராய்ச்சிகளுக்காக ரூபா 9,836,532 தொகை மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | | திறைசேரியிடமிருந்து ஆண்டின் இறுதிக் காலாண்டின் போதே பணம் கிடைத்துள்ளமையினால் முழுப் பணத்தினையும் ஆராய்ச்சிகளுக்கு வழங்க முடியாதிருந்தது என தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளர் தெரிவித்திருந்தார். |
| ஆரம்பிக்கப்படாத ஆராய்ச்சி | 2,248,554 | மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட 3 ஆராய்ச்சிகளில் 1 ஆராய்ச்சி இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் 2 ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பூர்த்திசெய்யப்பட்ட ஆராய்ச்சிகளுக்குரிய அறிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கு நீண்ட காலம் எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆராய்ச்சிகளின் விளைவுகளாக ஆக்கஉரிமை உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய ஆராய்ச்சியாளருடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆராய்ச்சியாளருக்கும் அவர் கடமையாற்றும் நிறுவனத்திற்குமே ஆக்க உரிமையினைப் பெற்றுக்கொள்ள முடியும் என பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய நேரத்தில் நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமையின் காரணமாக 2004 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியின் போது ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 24,987,968 பெறுமதியான

27 மானியங்களின் செயற்திட்டங்களைப் பூர்த்திசெய்ய வேண்டிய காலம் முடிவடைந்திருந்த போதிலும் அவ் ஆராய்ச்சிகளின் செயற்திட்ட அறிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதிவரையும் தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) ஆராய்ச்சி மானியத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள ரூபா 922,000 பெறுமதியான மூன்று புலமைப்பரிசில்கள் சுகயீனம், நாட்டைவிட்டு வெளிச்செல்லல் ஆகிய விடயங்களின் கீழ் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

### 2.2.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கவனயீனத்தின் காரணமாக விஞ்ஞான மன்றத்திற்குச் சொந்தமான பெறுமதி கணிக்கப்படாத தேசியக்கொடி, ஜீஐ குழாய்கள், கருத்தரங்கு மேசைகள், உணவுச் சாலையின் உபகரணங்கள், வெளிச்ச முறைமைகள் என்பன காணாமல் போயிருந்தன.

### 2.2.5 இனங்காணப்படாத மீதி

ரூபா 7,960,931 பெறுமதியான விஞ்ஞான ஆராய்ச்சி உபகரணங்கள் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவ் ஒப்படைப்புக்களை இனங்கண்டு கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆட்சேர்ப்புக்கள்

(ஆ) இருப்புக் கட்டுப்பாடு

(இ) கணக்கீடு

(ஈ) சேவைகளை வழங்குதல்